சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு.தி.அருண்குமார், (த/பெ.கா.திருமோனி(லேட்), முன்னாள் சுருக்கெழுத்து தட்டச்சர்) – மாவட்டத் தொழில் மையம், தூத்துக்குடி அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டவர் – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (பணி II (1)) துறை

அரசாணை (2டி) எண்.20

நாள். 16.11.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம், ஐப்பசி 30

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் கடித ந.க. எண்.19129/இபி1/ 2017, நாள் 19.04.2023.
3. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் (க்யூ1) துறை, நாள் 08.03.2023.
4. அரசுக் கடித எண்.5532/ஜி2/2023–1, மனிதவள மேலாண்மைத் (ஜி) துறை, நாள் 20.09.2023.

-------

ஆணை:–

மேலே இரண்டில் படிக்கப்பட்ட தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் கடிதத்தில், பணிக்காலத்தில் இறந்த அரசு ஊழியர் கா.திருமோனி, முன்னாள் சுருக்கெழுத்து தட்டச்சரின் மனைவி தனது மகனுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு கோரி 01.11.2010–ல் விண்ணப்பித்திருந்தார் என்றும், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கத் தேவையான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி பரிசீலிக்கப்பட்டு, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் செயல்முறை எண்.19129/இபி1/2017, நாள் 23.02.2022–ல் திரு.தி.அருண்குமார் அவர்களுக்கு இளநிலை உதவியாளராக மாவட்டத் தொழில் மையம், தூத்துக்குடி அலுவலகத்தில்

(ஊதிய நிலை ரூ.19500–62000) பணி நியமனம் செய்ய ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து தனியர் உடல் தகுதிச் சான்றுடன் இளநிலை உதவியாளராக 09.03.2022 முற்பகல் மாவட்டத் தொழில் மையம், தூத்துக்குடி அலுவலகத்தில் பணியேற்பு செய்துள்ளார் எனத் தெரிவித்து, தனியரின் கருணை அடிப்படையிலான பணி நியமனத்தை வரன்முறை செய்து ஆணை வழங்க அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்கண்ட நிலையில், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, தனியரின் கருணை அடிப்படையிலான பணி நியமனம் தொடர்பான அனைத்து ஆவணங்களும் மேலே ஒன்று, மூன்று மற்றும் நான்கில் படிக்கப்பட்ட அரசாணைகள் மற்றும் அரசுக் கடிதத்தின்படி அரசளவில் கவனமாக ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 28(1)–ன்படி தனியரின் பணியை 09.03.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்தும், அச்சட்டப் பிரிவு 28(2)–ன்படி தனியருக்கு அடுத்த ஊதிய உயர்வுகள் வழங்கவும், தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 09.03.2022 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், தனியரின் பணிவரன்முறை குறித்த உரிய பதிவுகள் தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**அர்ச்சனா பட்நாயக்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
திரு.தி.அருண்குமார்,
இளநிலை உதவியாளர்,
மாவட்டத் தொழில் மையம், தூத்துக்குடி.
(தொழில் ஆணையர் மற்றும்
தொழில் வணிக இயக்குநர்,
கிண்டி, சென்னை–32 அவர்கள் வழியாக).
தொழில் ஆணையர் மற்றும்
தொழில் வணிக இயக்குநர்,
கிண்டி, சென்னை–32.
மாநில கணக்காய்வு தலைவர் ,
சென்னை–18.

மாவட்டக் கருவூல அலுவலகம், தூத்துக்குடி.

**<u>நகல்:-</u>**

சுத்த நகல் / இருப்புக் கோப்பு.

(கோப்பு எண்.2928/பணிIII(1)/2023).

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

17/11/23

**பிரிவு அலுவலர்**

17.11.2023.